**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 441/2014** **நாள்.20.11.2025**

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வசுபால நைனார் | சாதி | |
| கிராமம் | வீடுர் | மதம் | இந்து |
| வட்டம் | திண்டிவனம் | வயது | 62 |

**ம.சா.1**

**4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ரவி என்பவர் என் மகன். அவர் விபத்தில் இறந்ததால் நஷ்டஈடு கோரி 2014 -ல் இந்த மனுவை தாக்கல் செய்தேன். அப்போது 1,2 எதிர்மனுதாரர்கள் மீது தான் தாக்கல் செய்தேன் என்றால் அது பற்றி தெரியாது. பின்னிட்டு டிரைலரின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்தோம் என்றால் தெரியாது. அதன் படி இ.ம.எண்.2652/2022, 20.02.2023 தேதியிட்ட உத்தரவின் படி 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பினராக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். மனுவில் 3-ம்எதிர்மனுதாரருக்கு சொந்த மான டிரைலர் வாகனத்தின் பதிவெண்ணை குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. 3,4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எவ்வித இழப்பீடும் கோரப்படவில்லை என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். 3-ம் எதிர்மனுதாரர் வாகனம் தொடர்பான எவ்வித ஆவணங்களும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தெரியாது. அசல் மனுவிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் 1,2 எதிர்மனுதாரர்கள் மீது மட்டும் தான் இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். எனவே 3,4 எதிர்மனுதாரர்கள் வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றாலும் அவர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. மனுவில் கோரியுள்ள பரிகாரத்தை தான் முதல் விசாரணையிலும் கோரியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனை அழைத்து சென்ற பிறகு தான் என் மகன் இறந்தார். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் முதலில்

சேர்த்தோம். பின் ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். நான் சென்று மருத்துவமனையில் பார்த்த பிறகு தான் ரவி இறந்தார். நான் என் மகனிடம் விபத்து குறித்து எதுவும் பேச இயலவில்லை என்றால் சரிதான். உள்ளேவிடவில்லை. எனவே விபத்து நிகழ்வு மற்றும் எந்த வாகனத்தில் அடிப்பட்டு இறந்தார் என்பது குறித்த விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் மகன் வீட்டில் இருந்து செல்லும் போது தலைக்கவசம் அணிந்து சென்றார். 18.08.2014 காலை 5.30 மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பினார். விழுப்புரம் டு திண்டிவனம் சாலையில் செண்டுர் என்ற இடத்தில் விபத்து நடந்ததாக கேள்விபட்டு சென்று பார்த்தேன். வீட்டிலிருந்து விபத்து நடந்த இடத்திற்கு 15 நிமிடத்தில் சென்று விடலாம். உடன் யார் சென்றார்கள் என்றால் அவரது நண்பருடன் சென்றார். இருசக்கர வாகனம் வசந்தராஜாவிற்கு சொந்தமானது. என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. அதை மனுவில் தாக்கல் செய்யவில்லையா என்றால் தெரியாது. விபத்து குறித்து புகார் யார் கொடுத்தது என்றால் வசந்தராஜா தந்தை ரமேஷ் கொடுத்தார். வசந்தராஜும் விபத்தில் இறந்து விட்டார். முதல் தகவல் அறிக்கை விபரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. விபத்து குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிஸ் விசாரணையில் நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று தான் சொன்னேனா என்றால் ஆமாம். போலிசார் விசாரணை தொடர்பான ஆவணம் எதையும் நான் படித்தோ, கேட்டோ தெரிந்து கொள்ளவில்லை. முதல் தகவல் அறிக்கையில் லாரியில் மாட்டி இழுத்து சென்று விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே டிரைலரில் சிக்கி விபத்து ஏற்படவில்லை என்றாலும் லாரியில் சிக்கி தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் சென்று பார்த்தபோது விபத்து சம்பந்தப்பட்ட லாரி மற்றும் கன்டெய்னர் அங்கிருந்தது. கன்டெய்னர் லாரியில் இணைக்கப்பட்டவாறு இருந்ததா என்றால் ஆமாம். வழக்கில் விபத்திற்கு 3-ம்எதிர்மனுதாரர் வாகனம் காரணம் என்று எங்கும் சொல்லப்படவில்லை என்றாலும் எனவே அதன் காப்பீட்டு நிறுவனமான 4-ம் எதிர்மனுதாரர் என் மகனுக்கு எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டது அல்ல என்றாலும் சரியல்ல. 3, 4 எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.